**ஹாலிஎல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

--------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 23 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 26 திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, ஹாலிஎல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான வீத வரி மற்றும் வரி வருமானம் ரூபா 4,766,135 தொகை எனினும், நிதிக்கூற்றுக்களில் அவை ரூபா 4,205,437 தொகை எனக் காட்டப்பட்டிருந்தமையால் வருமானம் ரூபா 560,698 தொகை குறைவாக காட்டப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டின் போது உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தப்பட்ட 12 கடன் தவணைகளின் பெறுமதியில் ரூபா 824,372 தொகை கடன்தொகையில் இருந்து குறைக்காதிருந்தமையால் நீண்டகாலப் பொறுப்புக்கள் அப் பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது தொடர்ந்து வரும் இரண்டு வருடங்கள் தொடர்பாக கிடைத்திருந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 96,000 தொகை வருடத்திற்கான வருமானம் என கணக்கீடு செய்திருந்தமையால் வருமானம் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது முத்திரைக் கட்டணம் சிட்டை இடல் ரூபா 8,000,000 தொகை எனினும், அவை நிதிக்கூற்றுக்களில் ரூபா 9,955,520 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் வருமானம் ரூபா 1,955,520 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பணம் சிட்டையிடல் ரூபா 5,500,000 தொகை எனினும், அவை நிதிக்கூற்றுக்களில் ரூபா 9,475,675 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் வருமானம் ரூபா 3,975,675 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) முன்னைய ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 3,975,675 தொகை எனினும், அவை ரூபா 3,214,642

தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் திரண்ட நிதியம் ரூபா 761,033 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது ரூபா 152,600 தொகை பெறுமதியான 108 நுகர்வுப் பண்ட விடயங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன செலவினத்திற்காக அரசிறை உதவுத் தொகை கணக்கு இந்த பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஏ) கடந்த ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டியிருந்த பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் சரிசெய்திருக்கவில்லை.

(i) பலவின கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 1,817,998 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்ததது.

(ii) முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 1,000,000 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தமை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்கு

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 2 கணக்கு மீதிகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் மீதி மற்றும் பேரேட்டுக் கணக்கு மீதிகளிடையே ரூபா 6,021,488 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 85,490,323 தொகைக்கான பெற வேண்டிய கணக்கு மீதியில் 02 வருடங்களை மிகைத்துள்ள நிலுவை வீதவரி ரூபா 2,673,460 தொகை, நிலுவை மின்சாரக் கட்டணம் ரூபா 468,559 தொகை, நிலுவை ஏக்கர் வரி ரூபா 10,704 தொகை, நிலுவை வாராந்த சந்தை வாடகை ரூபா 345,500 தொகை நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 1,069,640 தொகை, நிலுவை கடை வாடகை ரூபா 512,690 மற்றும் நிர்மாண வேலை கடன்பட்டோர் ரூபா 80,409,770 தொகை அடங்கியிருந்தது.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்கு

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 70,018,112 தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதி 02 வருடங்களை மிகைத்துள்ள கடன்கொடுத்தோர் மீதியாகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 93,686,753 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.5 இணக்கமின்மைகள்**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாண ங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி<br>ரூபா. | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் | | |
| (i) பிரிவு 49 | -- | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் போக்குவரத்து பாதைகள் மற்றும் அத்தியவசியமான பாதைகளுக்கு அண்மையில் காணப்படும் அங்கீகார மற்ற நிர்மாண வேலைகள் பரிசோத னை செய்து சட்டரீதியான நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 71 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) பிரிவு 127 | | (i) சபைக்குச் சொந்தமான பொது மயானங்களை பாதுகாக்கக் கூடிய விதமாக அளவை செய்து எல்லை அடையாளங்களை பொருத்தியிரு க்கவில்லை.<br>(ii) நில்போவல மயான காணியில் அங்கீகாரம் இன்றிய குடியிருப் பாளர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iii) பிரிவுகள் 158, 159 | 85,492,264 | சபையின் செயலாளரினால் நிலுவை வருமானம் அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஆ) 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சார் சட்டத்தின் பிரிவு 23அ | | கால் நடை அறுப்பு, நிலையத்திற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1981 இன் 60 ஆம் இலக்க கால்நடை அறுப்பு (திருத்திய) சட்டத்தின் 2008 இன் 13 ஆம் இலக்க (திருத்திய) சட்டத்தின் | | |
| (i) | II ஆம் அத்தியாயத்தின் பிரிவு 4 | | மாடு ஒன்று அறுப்பதற்கு முன்னர் ‘‘ஈ’’ படிவத்தின் பிரகாரம் விண்ணப்பப் பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. |
| (ii) | III ஆம் அத்தியாயத்தின் பிரிவு 21 | | பிரிவு 21 இற்கு முரணான ஹாலிஎல ஜும்மா பள்ளிக்கு சொந்தமான என கணிக்கப்படும் இடமொன்றில் நிறுவப் பட்டுள்ள கட்டிடமொன்றில் மாடு அறுக்கும் இடம் நடாத்துவதற்காக மற்றும் இறைச்சி எடுத்துச் செல்வதற்காக சபையினால் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | III ஆம் அத்தியாயத்தின் பிரிவு 22 | | மாடுகள் அறுக்கும் இடம் நாளாந்தம் மகப்பேற்று நிருவாகி ஒருவரின் மற்றும் பொது மக்கள் சுகாதார பரிசோதகர் ஒருவரின் மேற்பார்வைக்கு ஆளாகியிருக்கவில்லை. |
| (ஈ) | 1988 நிதி மற்றும் நிருவாக விதிக் கோவையின் விதி 217 மற்றும் 218 | | சபைக்குச் சொந்தமான சபையினால் பயன்படுத்தும் அனைத்து காணி கட்டிடங்கள் பி.ச.46 படிவத்தின் பிரகாரம் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்காததுடன், சபைக்குச் சொந்தமான காணிகள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடு மேற்கொள்ளப் பட்டு சபைக்கு அறிவித்திருக்கவில்லை. |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் xxiv பிரிவுகள் 1:6 மற்றும் 4 | 153,723 | சபையின் சேவை இடைநிறுத்தப்பட்ட மற்றும் இறந்த 14 உத்தியோகத்தர் களின் நிலுவைக் கடன் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஊ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப் பிரமாணம் 142(1) | | சபைக்குச் சொந்தமான 22 காணிகள் மற்றும் வியாபார நிலையங்களை வாடகைக்கு கொடுக்கும் போது அரச பிரதான பெறுமதி மதிப்பீட்டாளரிடம் பெறுமதி மதிப்பீடு ஒன்று பெற்றிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 371 | 769,617 | சபையின் கருமங்களை நிறைவேற்று வதற்காக 09 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த 04 வருடம் முதல் 07 வருடங்களை மிகைத்துள்ள முற்பணங்களை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 571 | 155,868 | 02 வருடங்களை மிகைத்துள்ள 05 வைப்புக்களை ஆதனவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,943,245 தொகை ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,891,090 தொகையாக காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் வருமான நிலுவை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கிழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 மதிப்பீட்டு வருமனம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரித்த வருமானம் | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பீட்டு வருமனம் | 2016 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2016 சேகரித்த வருமானம் | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 3,969,820 | 4,184,719 | 2,434,810 | 1,749,908 | 3,929,820 | 4,000,416 | 2,587,232 | 1,413,183 |
| (ii) வாடகை | 1,466,302 | 1,436,909 | 1,123,068 | 313,841 | 1,528,372 | 1,185,234 | 1,120,465 | 64,768 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,324,400 | 2,468,545 | 2,468,545 | - | 2,172,400 | 1,934,775 | 1,934,775 | - |
| (iv) ஏனைய வருமானம் | 4,119,250 | 2,144,479 | 2,144,479 | - | 1,456,500 | 842,868 | 842,868 | - |
| மொத்தம் | 11,879,772 | 10,234,652 | 8,170,902 | 2,063,749 | 10,087,092 | 7,963,293 | 6,485,340 | 1,477,951 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல்கள் செலாற்றுகை

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 10.2 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 8.2 மில்லியன் தொகை ஆகும். வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 2.1 மில்லியன் வருமானம் ஒன்று சேகரிக்கப்பட வேண்டியிருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நிலுவை வருமானம் 40 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

### 2.2.3 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மறைத் தண்டப்பணம் ரூபா 16,432,813 தொகை முத்திரைக் கட்டணம் ரூபா 6,771,204 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொதுப் பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்துதலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதிகள் மற்றும் நலனோம்பு ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

1987 பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் பிரகாரம் 30 பிரதான கருமங்களை நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்க வேண்டியிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 20 துணை விதிகள் மாத்திரம் ஆக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக சபை செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(இ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2016 ஜனவரி 18 திகதிய மாகண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் PL/15/10/33 இலக்கங் கொண்ட கடிதத்தின் பிரகாரம் திண்ம கழிவுப்பொருள் சேகரிக்கும் போது, உக்கக் கூடியவை/ உக்காதவை என வகைப்படுத்தி பெற்றுக்கொள்ள வேண்டுமெனினும், 2017 திசெம்பர் 31 திகதி வரை அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(ii) சேதனப் பசளை உற்பத்திக்கு பயன்படுத்தக் கூடிய கழிவுப் பொருட்கள் மற்றும் சேதனப் பசளை அரித்த பின்னர் மீதியாகும் பகுதிகள், சேதனப் பசளை செயற்தளம் அல்லாத தரையில் குவிக்கப்பட்டுள்ள குப்பைகள், ஓடையின் வழியாக பதுளுஓயா நதியுடன் சேரப்படுவதினால் சுற்றாடல்சார் சிக்கல்கள் பலவற்றிற்கு முகம்கொடுக்க வேண்டிய ஆபத்து நிலை ஒன்று காணப்பட்டது.

(iii) சேதனப் பசளை செயற்களத்தில் 09 ஊழியர்களை ஈடுபடுத்தியிருந்த போதிலும் குப்பைகளை அரிப்பதற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் அவர்களுக்கு மாதாந்தம் மருத்துவப் பரிசோதனை ஒன்று பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஈ) நிலை பேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்கு தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் மீது சபை அறிந்திருக்காத காரணத்தினால் அக் குறிக்கோள்களுக்கான உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை தரத்தை மற்றும் சுகாதாரத்தை மேண்படுத்துவதற்காக நீண்டகால திட்டங்கள் 2017 திசெம்பர் 31 திகதி வரையும் தயாரித்திருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 24 திகதி சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 3,480,000 தொகை பெறுமதியான சாக்கடை பவுஸர், 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் பதிவு செய்து பயன்படுத்தியிருக்காமையால் சார்க்கடை பவுஸர் சேவையை நிறைவேற்றுவதற்கு சபைக்கு முடியாதுள்ளது.

(ஆ) மல கழிவுப் பொருள் போடுவதற்காக சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட நில்போவல மயானம் அமைந்துள்ள காணி பிரதேச மக்களினால் அங்கீகாரம் இன்றி பிடிக்கப்பட்டிருந்ததுடன் காணியை தீர்ப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) முகுனுமத மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள 882 ஆம் இலக்க 02 ரூட் 6.9 பர்சஸ் அளவான காணி நீண்ட காலத்திற்காக 2012 செப்தெம்பர் 09 திகதி வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் வருடாந்தம் ரூபா 48,000 வீதம் அறவிடப்பட வேண்டுமெனினும், 2016 2017 மற்றும் 2018 ஆண்டுகள்

தொடர்பாக ரூபா 144,000 தொகையை அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 05 வெற்றிடங்கள் மற்றும் 59 மிகை ஊழியர்கள் காணப்பட்டதுடன் பதவியணி தேவையினை சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டுத் திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டிற்கான வருமானம் சேகரிப்பதற்காக ஆக்கப்பட்டிருந்த துணை விதிகளின் பிரகாரம் நிரந்தர அறிவித்தல் பலகை காட்சிப்படுத்துவதற்காக ஒரு சதுர அடிக்கு ரூபா 50 தொகை அறவிடப்பட வேண்டுமெனினும், அதிகார பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ள 15 அறிவித்தல் பலகைகளுக்காக ரூபா 154,400 இற்கான கட்டணமொன்று அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வாடகை வான்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் தரிப்பிடங்களுக்காக துணை விதிகள் ஆக்கி கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 விளைவற்ற/ குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை கொள்வளவு செய்திருந்த மோட்டார் கிரேடர், சார்க்கடை பவுஸர், கொங்கிரீட் கலவை இயந்திரம் 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் செயற்படுத்தப்படாமல் சபையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான டிரக்டர் வண்டி பழுதுபார்க்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.5.2 சொத்துக்களை ஆவணப்படுத்தாமை**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 17(3) மற்றும் 127 பிரிவின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான காணிகள், மயானங்களை அறுதியாக இனங்கண்டு, அளவை செய்து, பதிவேடுகள் பேணப்பட வேண்டுமெனினும், 167 காணித் துண்டுகள் தொடர்பாக அவ்வாறு செய்திருக்கவில்லை.

**3.6 பெறுகை**

**3.6.1 பெறுகைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்கான சபையினால் வருடாந்த பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

### 3.6.2 ஒப்பந்த வேலை நிருவாகம்

**அட்டம்பிட்டி நகரில் நீர் வழங்கல் திட்டத்திற்காக இரண்டு நீர்தொட்டிகள் நிர்மாணித்தல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்ட காணியின் உரிமையாளரின் விருப்பத்தை பெற்றிருக்காததுடன், இரண்டு தொட்டிகள் நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு தொட்டியின் வேலை மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ii) PVC நீர்க்குழாய் மீற்றர்கள் 200 வழங்கி மற்றும் பொறுத்துவதற்காக ஒரு மிற்றருக்கு ரூபா 1,792 வீதம் ரூபா 358,400 தொகை செலுத்தியிருந்ததுடன், பௌதீக ரீதியாக பரிசோதனை செய்தபோது 108 PVC மாத்திரம் பரப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 92 மீற்றர்களுக்காக ரூபா 175,616 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(iii) PVC நீர் குழாய்கள் 100 மீற்றருக்கு ஒரு மீற்றர் வழங்கி பொருத்துவதற்கு ரூபா 1,073 வீதம் ரூபா 107,300 தொகை செலுத்தியிருந்த போதிலும் பௌதீக ரீதியாக பரிசோதனை செய்த போது 28 மீற்றர்கள் மாத்திரம் பரப்பியிருந்தது. அதன் பிரகாரம் 72 மீற்றர்களுக்காக ரூபா 77,256 தொகை மிகையாக செலுத்தியிருந்தது.

(iv) பொறியியல் அங்கீகாரத்தின் பிரகாரம் நீர் குழாய்கள் பரப்பும் போது குறைந்த அளவு மேற்பரப்பில் இருந்து இரண்டு அடி ஆழத்தில் நீர் குழாய்கள் பரப்பப்பட வேண்டுமெனினும், பரப்பிய குழாய்கள் தரையின் மேற்பகுதியில் திறந்த நிலையில் காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டு கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ள பாதீட்டில் வருமானம் மற்றும் செலவுகள் மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையே கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாடுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்தில் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | வருமான நிருவாகம் | (i) | நிலுவை வருமானம் அறவீடு செய்யும் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டல். |
| | | (ii) | நீண்டகாலமாக நிலுவையாக காணப்பட்ட வருமானங்களை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (iii) | பிரதேசத்தில் விளம்பர அறிவித்தல் பலகை தொடர்பாக வருடாந்த கணிப்பீடு மேற்கொண்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிர்மாண வேலை நிருவாகம் | (i) | நிர்மாண வேலை வெளிக்கள பரிசோதனை அலுவல்களை மேற்பார்வை செய்யாமை. |
| | | (ii) | நிர்மாண வேலை மேற்பார்வை மற்றும் நிருவாகத்திற்காக அறிக்கைகள் பேணப்படாமை. (பாதை பதிவேடு, கட்டிடப் பதிவேடு) |
| (இ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) | சபைக்குச் சொந்தமான காணிகள் கட்டிடங்களை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| | | (ii) | சொத்துக்கள் வகுப்புக்களின் அடிப்படையில் வகைப்படுத்தி நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரை பேணப்பட்டிருக்காமை. |
| | | (iii) | சபைக்குச் சொந்தமான காணிகள் மயானங்களை அளவை செய்து அறுதியாக பிரித்திருக்கவில்லை. |